தேவ ஊழியருக்குச் சில நல் யோசனைகள்

உன்னதமாகத் தேவன் உன்னை உபயோகிக்கவேண்டுமென்றால், மேன்மையான பரிசுத்தம் நம்மில் காணப்படவேண்டும்.

தேவன் உன்னை உபயோகிக்க ஆசித்தால், நீ அவருடன் நடக்க வேண்டும்.

தேவனுடைய பாத்திரம், தாழ்மையும், பரிசுத்தமுமாயிருக்கவேண்டும்.

உன்னுடைய பரிசுத்த வேதாகமத்தைக் குறித்து வெட்கப்படாதே; அல்லது, அதற்கு அவமானத்தை உண்டாக்கும் சின்னமாய் நீ விளங்காதே.

சிறு காரியமென்றாலும், அதை விருப்பத்துடன் செய். சில சிறிய காரியங்களின் முடிவு மிக மேன்மையாக விளங்கியிருக்கிறது.

அங்கும் இங்கும் விரைந்து ஓடி வேலை செய்கிறதைவிட, அதிக நேரத்தைத் தனிமையாக முழங்காலில் செலவிடு.

ஜெபிப்பவன்தான் மேன்மையான சாட்சி கூறமுடியும்.

எந்தக் காரியமானாலும், உரை கல்லாகிய வேத வசனத்தால் சோதித்து அறிந்துகொள். அதற்குமேலான பரீட்சை எதுவும் கிடையாது.

நீ செய்கிறதற்கு விரும்பாத காரியங்களை மற்றவர் செய்யும்படி எதிர் நோக்காதே.

எப்பொழுதும் பரிசுத்தஆவியினால் நிறைந்திரு. வறண்ட கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கமுடியாது.

உன்னுடைய அறிவிலிருந்தல்ல, உன்னுடைய அனுபவத்திலிருந்தே சாட்சி சொல்.

எல்லா நல்லுதவிகளையும் பயன்படுத்து: ஆனால் உன்னுடைய முழு நம்பிக்கையும் தேவன் பேரில்தான் இருக்கவேண்டும்.

ஆத்துமாக்கள் பாவத்தினின்று மனந்திரும்ப எதிர் நோக்கி வேலை செய். ஜெபத்தில் தரித்திரு. அதிக பலனடைய வேண்டுமென்னும் நோக்கத்துடன் செய்யும் ஊழியமே பாராட்டத்தக்கது.

கலப்பில்லாத, களங்கமற்ற உபதேசம் செய். சத்தியங்களை நன்றாக விளங்கிக்கொள். உனக்கு விளங்காத சத்தியங்களை மற்றவர்களுக்கு விளக்கிக் காட்ட உன்னால் இயலாது.

சத்தியத்தை முழுவதுமாகப் போதிக்க, உனக்கு விருப்பமில்லாதவைகளை விட்டுவிட்டு, உனக்கிஷ்டமானவைகளை மாத்திரம் போதிக்காதே.

அன்பில் நிலைத்திரு. 1 கொரி. 13-ம் அதிகாரத்தை அடிக்கடி வாசி. அதன்படி ஜீவிக்கப் பிரயாசப்படு.

பொறுமையைக் கையாடு. வேத வசனமாகிய விதையை நீ விதை. அதன் பலனை ஒருவேளை நீ காணமாட்டாய்: மற்றவர்கள் அதன் பலனைக் கண்டு களிப்பார்கள்.

அஞ்சா நெஞ்சமுள்ள வீரனாயிரு. துன்பம் வரும்போது சோர்ந்து போகாதே. அல்லது துன்பத்தை விட்டு விலகி ஓடாதே. போராடி வெற்றிகொள்.

மனிதரைப் பிரியப்படுத்த உன்னால் முடியாவிட்டாலும், தேவனைப் பிரியப்படுத்தும்படி பாடுபடு. இயேசுவை நீ அடைவதும், பிறரை இயேசுவை அடையச் செய்வதுமே உன் வாழ்க்கையின் இலட்சியமாயிருக்கட்டும்.